**மினுவங்கொடை பிரதேச சபை - 2023**
-------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மினுவங்கொடை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மினுவங்கொடை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் இலக்கம் 3.28 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.2 இற்கு இணங்க செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது மீளாய்வாண்டின் மிகைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த சீராக்கல்களில் பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டது. | | |
| (i) சீராக்கல்கள் என காட்டப்பட்டிருந்த ரூபா 39,755,084 தொகைக்கான பெறுமதி எதுஎன கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை. | 2024 ஆண்டு முதல் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் போது ரூபா 37,122,983 தொகைக்கான பெறுமானத்தேய்வுச் செலவுக்காக ரூபா 43,004,688 தொகை சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | மீளாய்வாண்டின் போது ரூபா 81,679,926 தொகைக்கான வட்டி வருமானத்திற்கு பதிலாக ரூபா 30,000,000 மாத்திரம் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | பெற வேண்டியவைகளின் அதிகரிப்பு ரூபா 50,809,972 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 51,740,408 தொகையென காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | முற்பெறுவனவு வீதவரி அதிகரித்தல் என ரூபா 127,257 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான வித்தியாசமொன்று கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (vi) | செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு ரூபா 191,054,983 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 186,052,669 தொகையென காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (vii) | செலுத்த வேண்டியவைகளின் முரண்கள் சீராக்கல் செய்யப்பட்ட போதிலும் பலவின கடன்கொடுத்தோர் குறைவடைதல் என ரூபா 183,478,253 தொகையும் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

(ஆ) நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.29 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது முதலீடுகள் விடுவித்தல் ரூபா 45,772,818 தொகை எனினும் அதனை ரூபா 1,500,000 என மற்றும் ரூபா 13,500,000 என காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு முதல் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 170,000,000 தொகையும் கிடைத்திருந்த வட்டி வருமானம் ரூபா 64,943,496 தொகையும் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த காணி ஒன்று மற்றும் நூலகப் புத்தகங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 1,324,035 தொகை ஆதனங்கள் பொறித்தொகுதிகள் தனதாக்கலுக்காக பணமாக செலுத்தப்பட்டிருந்த கொடுப்பனவு என காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.30 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.4 இற்கு இணங்க நிதித் தொழிற்பாடுகள் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 792,459 இற்கான வட்டி காட்டப்பட்டிருக்காததுடன் கிடைத்திருந்த மூலதன மானியம் ரூபா 10,481,642 தொகை எனினும் ரூபா 11,404,241 என காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டின் போது சபையின் செயற்திட்டங்களுக்காக கடன்கொடுத்தோர் மிகை ஏற்பாடு ரூபா 5,894,109 தொகை மீளாய்வாண்டின் போது பதிவழிக்கும் போது குறிப்பிட்ட ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் உபகரண விடயங்கள் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் மொத்த அகல்விரிவான ரூபா 150,994,905 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணிகளை ஏல விற்பனை செய்யும் போது சபைக்குக் கிடைத்திருந்த இரண்டு காணித் துண்டுகளை மூலதனப்படுத்தியிருக்காததுடன் அந்த காணிகளை ஏல விற்பனை | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் போது ஒரு பர்சஸிற்கான குறைந்த பெறுமதி மீது இரண்டு காணிகளின் அண்ணளவான பெறுமதி ரூபா 16,910,000 தொகையாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் ரூபா 1,100,000 இற்கான பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 15,810,000 இனால் காணியின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 59,171,479 தொகை மிகையாகவும் நிலையான வைப்பு மீதி ரூபா 106,439,287 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் போது ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக மூலதன செலவு மானியமென ரூபா 11,805,677 தொகை கிடைத்திருந்த போதிலும் அகல்விரிவான வருமானக் கூற்றில் ஆண்டின் போது பெறுவனவு என ரூபா 171,504,241 தொகை காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது பாதை திருத்த வேலை ஒன்றிற்காக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 992,267 தொகை மற்றும் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மீண்டுவரும் செயற்திட்டங்களுக்கான மானியம் ரூபா 5,000,000 தொகை வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | 7 சந்தர்ப்பங்களில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 23,323,399 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின்/ பேரேட்டுக் கணக்குகளின் கூட்டுத்தொகை மற்றும் நிதிக் கூற்றுக்களில் 13 கணக்கு மீதிகளில் இடையே ரூபா 55,370,773 தொகைக்கான இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | பதிவேடுகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை பரிசோதனை செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பாதைகள், பாலங்கள் மற்றும் மதகுகள் | 174,399,205 | அட்டவணை | பதிலழிக்கப்படவில்லை. | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மூலதன மானிய ஆரம்ப மீதி | 177,978,177 | அட்டவணை | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ஏனைய உபகரணங்கள் | 4,169,914 | விடய வகைகள் | அட்டவணை இணைத்துள்ளது எனவும் பட்டியலின் படி பட்டியல் பின்னர் சமர்ப்பிக்கப்படும் என. | -மேற்படி- |
| (ஈ) | பெற வேண்டியவைகள்- ஏனையவைகள் | 19,975 | அட்டவணை | 2024 ஆண்டின் போது பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | -மேற்படி- |
| (உ) | நீர் கடன்கொடுத்தோர் | 80,825 | அட்டவணை மற்றும் காலப்பகுப்பாய்வு | 2024 ஆண்டின் போது பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | களஞ்சிய வழங்குதல்கள் | 51,444,451 | களஞ்சிய வழங்குதல்கள் உறுதிச் சீட்டுக்கள்/ நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் அட்டவணைகள் | -மேற்படி- | -மேற்படி- |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆவது அத்தியாயத்தின் பந்தி 38(2) | நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது எனவும், அந்த முறைமையை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட வேண்டிய எழுத்துமூல மீளாய்வொன்றின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் என. | குறிப்பிட்ட சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 104(3) | 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய நேரத்தில் ஆரம்ப விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | -மேற்படி- |
| | (ii) நி.பி. 571 | கூட்டுப் பெறுமதி ரூபா 8,079,608 தொகைக்கான இரண்டு வருடங்களை மிகைத்துள்ள காலவதியாகிய வைப்புக்களை சேதனவழிப்புச் செய்திருக்கவில்லை. | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு கணக்குகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 | 10 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என. | -மேற்படி- |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 24 திகதிய LGD/09/2019(I) கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கை | அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பண "பீ" கணக்கின் படிவத்திற்கு இணங்க ஊழியர் கடன் தொடர்பாக வருடாந்தம் கடன் எல்லைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டு மூலம் சரி செய்யப்பட்டுள்ளது என. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 30,650,742 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 257,692,865 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 34,137 | 37,083 | 27,210 | 39,430 | 35,220 | 29,735 | 25,666 | 36,938 |
| (ii) | வாடகை | 1,595 | 1,633 | 2,068 | 411 | 1,516 | 1,430 | 1,430 | 603 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 965 | 2,466 | 2,466 | - | 1,110 | 1,180 | 1,180 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 642 | 537 | 467 | 115 | 1,131 | 220 | 692 | 179 |
| | | 37,339 | 41,719 | 32,211 | 39,956 | 38,977 | 32,565 | 28,968 | 37,720 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மொத்த மதிப்பீட்டு வருமானத்தில் 112 சதவீதம் சிட்டையிடப்பட்டிருந்த போதிலும் மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 77 சதவீதம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தமையால் மொத்த வருமான மதிப்பீடு தத்ரூபமானதாக காணப்படவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | தத்ரூபமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் வீதவரி மற்றும் வரி சிட்டையிடல் வருமானம் மதிப்பீட்டு வருமானத்தை விட ரூபா 2,946,000 தொகையினால் அதிகரித்திருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 8 சதவீதமாகும். | பொதுவாக மதிப்பீட்டு வருமானத்தை விட சிட்டையிடப்பட்ட வருமானம் அதிகரிக்கின்றது. அறுதியாக மதிப்பீடு தயாரிக்க முடியாதுள்ளது என. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் ஏனைய வருமானங்களின் சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம், மதிப்பீட்டு வருமானத்துடன் இணக்கம் செய்யும் போது சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 105,000 தொகையினாலும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 175,000 இனாலும் குறைந்திருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தின் முறையே 16 சதவீதமும் மற்றும் 27 சதவீதத்திற்கான குறைவடைதல் ஆகும். | பரிசோதனை மேற்கொண்ட பின்னர் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |

### 2.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2000 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான ரூபா 817,127 இற்கான 32 முற்பண மீதிகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியாமையால் அதற்காக தனிப்பட்ட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என. | தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை காணப்படுகின்ற ரூபா 1,223,202 இற்கான 36 பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்திருக்காததுடன் ரூபா 34,979,545 இற்கான 84 செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்திருக்கவில்லை. | 2024 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கேட்போர் கூடத்திற்காக கட்டண அறவீடு செய்வதற்காக 2023 ஆண்டின் போது கட்டணம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான துணைச் சட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | துணைச் சட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | துணைச் சட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மின்மெதுர வியாபாரக் குடில்களுக்காக கட்டணம் அறவீடு செய்வதற்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான கட்டணத்தை தீர்மானித்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பாக துணைச் சட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | வருடாந்தம் வியாபார நிலையங்களை ஒழுங்குறுத்துவதற்காக துணைச் சட்டமொன்று சட்டவாக்கம் செய்திருக்கவில்லை. | துணைச் சட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | துணைச் சட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 ஆண்டின் போது கிடைத்திருந்த ஆனால் கணக்காய்வு திகதியாகிய 2024 ஜனவரி 24 திகதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்காத 102 பொது மக்கள் முறைப்பாடுகள் காணப்பட்டது. | முறைப்பாடுகளை உச்சமட்ட அளவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான தீர்வுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக 2023 ஆண்டிற்காக கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | வழங்க வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு அந்த நிறுவனங்களுக்கு அறிவுருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணிப்பீட்டொன்றின் மூலம் இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மோட்டார் கிரேடர் மற்றும் ஜே.சீ.பீ. இயந்திரம் 2023 ஆண்டின் போது வாடகைக்கு கொடுத்ததன் மூலம் கூட்டுத்தொகை ரூபா 495,350 இற்கான வருமானமொன்று பெற்றிருந்த போதிலும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் சேவைகளை வழங்கி பின்னர் பணம் அறவீடு செய்த 03 சந்தர்ப்பங்களும் 03 மணித்தியாலங்களுக்காக கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பம் ஒன்று காணப்பட்ட போதிலும் அந்த காலத்தை உறுதிசெய்த முறையும் ஓட்ட அட்டவணைகள் உரிய முறையில் நிரப்பப்படாமையால் 10 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 219,600 இற்கான வருமானத்தின் உண்மைத் தன்மை மற்றும் அவை ஓட்ட அட்டவணைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாமல் போனது. | பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இயந்திரங்களை வாடகைக்கு வழங்கள் தொடர்பாக சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டும். |
| (இ) | விளம்பர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு கட்டணம் அறவீடு செய்ய முடியுமான விளம்பர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக இனங்காணல் ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | விளம்பர அறிவித்தல் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு இனங்காணல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணிப்பீடொன்றின் மூலம் கட்டணம் அறவிடக் கூடிய அறிவித்தல் பலகைகளை இனங்காணல் வேண்டும். |
| (ஈ) | விளம்பர அறிவித்தல் பலகை கட்டணம் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தை விட 2023 ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் குறைந்த பெறுமதியொன்று அறவீடு செய்வதற்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. | விசாரணை மேற்கொண்டு கணக்காய்விற்கு பின்னர் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என. | துணைச் சட்டங்களின் படி செயற்பட வேண்டும். |
| (உ) | உப அலுவலகங்களினால் அந்த அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள் சிற்றுண்டிச் சாலைகள், தங்குமிடங்கள் போலவே சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருக்காத ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், தங்குமிடங்கள் தொடர்பாக விபரங்கள் அடங்கிய பதிவேடு பேணிச் சென்றிருக்காததுடன் அதுதொடர்பான கணிப்பீடொன்றும் மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் கணிப்பீடு பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திக் கட்டணம் அறவீடு தொடர்பாக பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணிப்பீடொன்றின் மூலம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 இற்கு முரணாக தெவலபொல மற்றும் உடுகம்பல உப அலுவலகங்களில் அதிகாரப் பிரதேசங்களை சேர்ந்த சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 02 ஹோட்டல்களில் இருந்து வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பெற்றுக் கொள்ளல் மற்றும் நிதிப் பிரமாணம் 135 இற்கு இணங்க வருமானமதிப்பீடொன்று மேற்கொண்டிருக்காமல் அந்த ஹோட்டல்களின் வருமானத்தின் மீது அனுமதிப்பத்திர கட்டணம் தீர்மானிக்கப்பட்டு சபைக்கு அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமையால் 2001 முதல் 2023 வரை கூட்டுத்தொகை ரூபா 509,906 தொகை மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2024 ஆண்டிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்யும் போது நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 135 இற்கு இணங்க அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நைவலயில் அமைந்துள்ள புன்சி நைவலவத்த பொதுக் காணிக்காக நுழைவு பாதையொன்று காணப்படவில்லை எனவும் தனியார் தரப்பினரின் காணி மற்றும் பொதுக் காணியை வேறுபடுத்தி இனங்காணக் கூடியவாறு எல்லையை கண்டறிய முடியாமையால் சபைக்கு சொந்தமான அந்த மீதியான காணிப் பகுதியை இழக்கும் ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டது. | தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசோதனை செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) சபைக்கு சொந்தமான விகனமுள்ள மயானக் காணி, நில்பனாகொட தொலேவத்த காணிப் பகுதி மற்றும் த பினான்ஸ் கம்பனியினால் ஏல விற்பனை செய்யப்பட்ட காணியில் சபைக்கு கிடைத்திருந்த காணிப் பகுதி முறையான அங்கீகாரம் ஒன்றினால் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | டென்டர் நடைமுறை கடைபிடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்றறிக்கை மற்றும் 2016 நவம்பர் 09 திகதிய LGD/13/2016 இலக்கங் கொண்ட 2020 திசெம்பர் 03 திகதிய LGD/13/2016(i) இலக்கங் கொண்ட உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் இன்றி 20 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் மாபொந்தல 50 கடையறைகள் வாடகைக்கு கொடுக்கும் போது புதிய சுற்றறிக்கைக்கு இணங்க மீண்டும் புதிய வாடகை உடன்படிக்கை திருத்தி உடன்படிக்கை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆதனங்கள் துணை வாடகைக்கு வழங்கள் தொடர்பான சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | வாடகைக்கு எடுப்போரிடம் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையின் 34 ஆவது நிபந்தனையின் படி வாடகைக்கு எடுத்தவரினால் கடையறைகளை அல்லது அதன் ஒரு பகுதியையோ எவ்விதத்திலும் மாற்றங்கள் செய்தல், இணைத்தல் சபையின் எழுத்துமூல அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படக் கூடாத போதிலும் அதற்கு முரணாக உடுகம்பொல இலக்கம் 07 மற்றும் 08 ஆகிய கடையறைகளில் மத்தியில் இருந்த சுவரை அகற்றி தனியான அறையாக ஆக்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | சுவரை அகற்றியிருந்தமை சபைக்கு எதுவிதத்திலும் வருமானம் குறைவடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. | வாடகைக்கு கொடுத்த ஆதனங்கள் தொடர்பாக உரிய முறையில் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2014 ஒக்தோபர் 24 திகதி ரூபா 32,500,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த 13 ஏக்கர் 2 ரூட் 12.7 பர்சஸ் அளவையுடைய மாபொதல கோனமடேவத்த என்ற தென்னங்காணியில் காணப்பட்ட தென்னை மரங்களுக்கு இலக்கம் இடப்பட்ட போதிலும் விளைச்சலை தருக்கின்ற மரங்களின் எண்ணிக்கையை கணித்தல் அல்லது வழங்கியிருந்த விளைச்சல் தொடர்பாக எதுவித அறிவித்தலும் மேற்கொண்டிருக்காமையால் 2016 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை பெற்றுக்கொண்டிருந்த ரூபா 2,634,302 இற்கான வருமானம் தொடர்பாக சரியான மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட்டது என மற்றும் வருமானம் சரியானவை என திருப்தியடைய முடியாதுள்ளது. | செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிர்பார்த்தவாறு 2014 ஆண்டின் போது விளைச்சலை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது என. | காணியை கொள்வனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்திட்ட அறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி இரண்டாம் மட்ட பதவிகளில் 3 வெற்றிடங்களும், ஆரம்ப மட்ட 06 பதவிகளில் 09 வெற்றிடங்களும் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் மீண்டும் மீளாய்வு செய்து அறிவிக்கும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது என. | சபையின் கருமங்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வகைளில் பதவியணி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 7/2155 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபையின் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பான விதி 08 இற்கு முரணாக சபை நிதியத்தின் கணக்குகள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டிற்குமான கணக்குகள் தொடர்ந்துவரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 12 நாள் தாமதத்தின் பின்னர் 2024 மார்ச் 12 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறிப்பிட்ட தினத்தில் கணக்குகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட தினத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |